19.08.2024 OS.No.51/2020 PW2 Name :.மல்லிகா

குறுக்கு விசாரணை

1. நான் எட்டாம் வகுப்பு படித்துள்ளேன். வாசாஆ 2 ஆவணத்தில் சொத்தினை வாங்கியவர் சேகர் என உள்ளது. வாசாஆ 2 ஆவணத்தில் உள்ள சொத்து வழக்கில் சேர்க்கபட்டுள்ளதாக என்பது எனக்கு தெரியாது. வழக்கில் எத்தனை அயிட்டங்களாக சொத்துகள் உள்ளது என்பது எனக்கு தெரியாது. எந்தெந்த சர்வே எண்ணில் உள்ள சொத்து எவ்வளவு விஸ்தீரணம் வழக்கில் கூறபட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. வீராசாமி கவுண்டர் இறந்து சுமார் 40 ஆண்டுகள் ஆகிறது.
2. வீராசாமியின் மகன் ரவி, மகள்கள் தமிழ்செல்வி, சாந்தி ஆகியோர்களின் திருமணத்தை சேகர் தான் நடத்தி வைத்தார். சேகரிடம் தான் ரவி வேலை செய்து இருந்தார். சேகர் கொடுக்கும் வருமானத்தில் தான் வாதி ரவி வாழ்க்கை நடத்தினார் என்றால் அது எனக்கு தெரியாது. சேகரின் தாயாரிடம் நான் கடன் எதுவும் வாங்கியது இல்லை. கடன் கொடுக்கும் அளவிற்கு அவருக்கு வசதி இல்லை. அவரை இறக்கும் வரை சேகர் தான் பராமரித்து வந்தார்.
3. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சம்மன் எதுவும் வரவில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டுள்ளேன். யார் யார் வீட்டில் எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்பதை நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. ரவி குடியிருக்கும் வீட்டை காலி செய்ய சொல்லி சுமார் 2, 3 ஆண்டுகளாக சேகர் கேட்டு வருகிறார். ரவி கேட்டுகொண்டதால் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. சேகருக்கு ரவி வாடகை எதுவும் கொடுப்பதில்லை. வாடகை இல்லாமல் தான் ரவி குடியிருந்து வருகிறார் என்றால் அது எனக்கு தெரியவில்லை. என்ன சொத்துகளுக்கு வழக்கு போடப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. சுமார் 11 ஆண்டுகளுக்கு முன் வாதியின் ரவியின் தாயார் இறந்துள்ளார். வீட்டு பிரச்சனை தவிர ரவிக்கும் சேகருக்கும் வேறு எந்த பிரச்சனையும் இல்லை. சேகர் எல்ஐசியில் கடன் வாங்கி வழக்கு சொத்தில் உள்ள வீட்டை கட்டியுள்ளார் என்பது எனக்கு தெரியாது.
5. பாபு, தமிழ்செல்வி, சாந்தி கூறியும் ரவி வீட்டை காலிசெய்ய மறுகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. சொத்தில் சேகர் எவ்வளவு கடன் வாங்கியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த விவரங்கள் எதையும் வழக்கறிஞரிடம் நான் கூறவில்லை. ரவி ஆதரவாக பிரமாண பத்திரத்தில் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளேன். வழக்கறிஞர் தயார் செய்த முதல் விசாரணை ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் நான் படித்து பார்த்து அதில் சில உண்மைகள் இருந்ததால் கையெழுத்து போட்டேன்.
6. வழக்கு சொத்து யாருக்கு சொந்தம் என்பது எனக்கு தெரியாது. அதை பிரமாண பத்திரத்தில் கூறவில்லை. வழக்கறிஞரிடம் அதை கூறவில்லை. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 19/08/2024 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

B RAJA

Digitally signed by B RAJA
Date: 2024.08.19 15:12:03 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.